ரான்டம் பார்த்தோம். அந்த மெமொரண்டம் படி பார்த்தால் There is a case for regular session with supplementary Budget. அதற்கும் அப்படி என்று சொன்னால், இன்னின்ன ஐயிட்டத்திற்கு இந்தமாதிரி செய்ய வேண்டியிருக்கிறது என்று எக்ஸ்பிளனேட்டரி நோட் பார்க்கும்போது செஷன் கூடி அதைச் செய்யாமல், பட்ஜெட்டாக வைத்துக்கொண்டு கவர்ன்மென்ட் எடுக்கக்கூடிய முறையே இந்த மாதிரி இத்தனை குரோார்ஸ் இன்க்கிரிஸ் பண்ணுவது, இன் பிரின்சிபிள் இதை நான் சட்டபூர்வமாக கிளப்பவில்லை. பார்லிமென்டரி புரோசீஜர் சரியில்லை, இது மாதிரி கன்டின்ஜென்சி பண்டையே இன்கிரிஸ் பண்ணுவது by promulgation of an ordinance என்பது most undemocratic ஆகவே, அதை அனுமதிக்கக் கூடாது என்று நான் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட விளக்கங்கள் சொல்ல நான் இந்த வாய்ப்பை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அவசரச் சட்டத்தின் மூலமாக எதிர்பாராச் செலவு நிதிக்கு, அவசரச் சட்டத்தின் மூலமாக ஒதுக்கீடு செய்வது என்பது முன் மாதிரியாக பல சமயங்களில் இருந்திருக்கிறது. விவாதம் வருகின்றபோது அதற்கான விளக்கங்கள் எல்லாம் நான் தருகிறேன். ஆனால் இந்த எதிர்பாராச் செலவு நிதி மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு, சட்டப்படி, முறைப்படி, நியாயப்படி, சட்டத்திற்குப் புறம்பாகாத வகையில் அறிமுகம் செய்ய அனுமதி வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: தமிழ்நாடு 1982-ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறை) திருத்த சட்டமுன்வடிவு, 1982,

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982—ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறை) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

[1982 செப்டம்பர் 6]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன் வடிவு பேரவைமுன் அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 11.30)

(இ) வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1982

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் வேளாண் விளைபொருள் அங்காடிகள் (திருத்தம்—சிறப்பு விதித்துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் தலைவர் அவர்களே நான் இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்வதை எதிர்க்கிறேன். காரணம் நம்முடைய வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து இந்த மன்றத்தில் இப்படிப்பட்ட சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து நிறைவேற்றி, தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீடித்துக்கொண்டே இருக்கிறார்கள். இந்த விற்பனை அங்காடிகளை ஒழுங்கு படுத்துவதற்கோ அல்லது அவற்றை ஒழுங்காக நடத்துவதற்கோ எந்த வழிமுறையையும் ஏற்படுத்த இதுவரையிலும் முன்வரவில்லை. அவற்றின் அமைப்பு விதித்துறைகளில் மேற்கு வங்காளம், அஸ்ஸாம், இமாச்சலப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் செயலில் உள்ள சட்டங்களுக்கு ஏற்ப விரிவான திருத்தங்களைச் செய்வது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது என்ற ஒரே காரணத்தை தேசீய கீதத்தை இசைப்பதுபோல் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த தனி அலுவலர்களின் நியமனத்தைத் தவிர்ப்பதற்கும் அங்கே தலைவர் தேர்வு நடத்துவதற்கும் ஏன் இந்த அரசு தயக்கம் காட்டுகிறது என்பது தெரியவில்லை. ஆகவே நான் இதை எதிர்க்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி, பொன்னையன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.